செய்தி வெளியீடு எண்: 376 நாள் : 12.07.2013

# தேசிய நிலப்பதிவுருக்கள் நவீனப்படுத்தும் திட்டம் (NLRMP) மண்டல ஆய்வுக் கூட்டம்

## இடம் : ஹோட்டல் சவேரா, சென்னை

## நாள் : 12.7.2013, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் உரை

இந்திய அரசின் நில ஆதாரத்துறை செயலர் அவர்களே, மற்றும் அத்துறையின் மூத்த அதிகாரிகளே,

தென்னிந்திய மாநிலங்களின் செயலர்களே மற்றும் அதிகாரிகளே,

தமிழக அரசின் செயலர்களே மற்றும் அதிகாரிகளே,

தேசிய நிலப்பதிவுருக்கள் நவீனப்படுத்தும் திட்டம் (NLRMP-RFD) குறித்த இந்த மண்டல ஆய்வுக் கூட்டத்திற்கு உங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கிறேன்.

தேசிய நிலப்பதிவுருக்கள் நவீனப்படுத்தும் திட்டம் (NLRMP-RFD) குறித்த இந்த மண்டல ஆய்வுக் கூட்டத்தினை தொடங்கி வைக்க மேலான அனுமதி அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இணையில்லா மற்றும் ஒப்பற்ற தலைமையின்கீழ் தமிழகம் அனைத்து துறைகளிலும் ஒளிமயமான நிலையை நோக்கி பீடுநடை போட்டு வருகின்றது என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும், தேசத்தின் முதல் மாநிலமாக திகழ செய்வதே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசின் முதன்மை இலட்சியம் ஆகும். இந்த இலட்சியத்தை எய்தும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் **"தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் – 2023"** என்ற திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை மனதில் கொண்டு, நிலஉரிமைதாரர்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் அனைத்து நிலஆவணங்களையும் கணினிப்படுத்தி இணைய வழியில் கொண்டுவர திட்டநிரல் (Action Plan) வகுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**நேரமின்மை காரணமாக எனது உரையின் தொகுப்பினை உங்கள் அனைவருக்கும் வழங்கிட ஏற்பாடு செய்துள்ளேன். எனது உரையில் கூறப்பட்டுள்ளவற்றை ஆய்ந்து, உங்களது சீரிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை அரசிற்கு வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

இருப்பினும், நிலஅளவை துறையில் தமிழ்நாடு எந்த அளவிற்கு சிறந்து விளங்குகிறது என்பதையும், அதனை நவீன மயமாக்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

நிலஅளவையில் தமிழகம் ஒரு முன்னோடி மாநிலம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். தமிழ்நாட்டில்தான் முதன்முறையாக முறையான நிலஅளவையும் அதன் ஒழுங்குமுறையும் கி.பி. 985–1011ல் தஞ்சையை ஆண்ட அருள்மொழித்தேவன் என்ற முதலாம் இராஜராஜசோழன் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. தமிழகத்தின் அனைத்து நில பகுதிகளுக்கும் துல்லியமான நிலஆவணங்களை தமிழகம் கொண்டுள்ளது. இந்த ஆவணங்கள், ஆங்கிலேயர் காலம்தொட்டே, கணித வகையில் நிரூபிக்கப்பட்ட அளவை முறை மூலம் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே தயாரிக்கப்பட்டவையாகும்.

நிலப் பதிவுருக்கள் அனைத்தையும், மின்னணு வடிவில் மாற்றி நிதர்சனமான பராமரிப்பு முறையை நடைமுறைபடுத்துவதே இத்துறையின் முதன்மையான பொறுப்பாகும். இதன்மூலம், நிலமாற்றங்களையும் நிலப்பகுதிகளின் உட்பிரிவுகளையும் துரிதமாகவும் வெளிப்படையான வகையிலும் மேற்கொள்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி கீழ்காணும் திட்டங்களை நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்:

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பொதுமக்கள் நிலஅளவர்களை எளிதாக தொடர்புகொள்ள ஏதுவாக **100 குறுவட்டங்களில் குறுவட்ட அளவர்களின் பயன்பாட்டிற்காக அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டப்படும்.**
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, **சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள `நிலஅளவை இல்லத்தில்' செயல்பட்டு வரும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரக வளாகத்தில் புராதன நிலஆவணங்களை பாதுகாக்கும் வகையில் கூடுதல் கட்டிடம் ஒன்று கட்டப்படும்.**
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, இணையதளத்திலுள்ள அனைத்து நிலஆவணங்களையும் மற்றும் கணினிப்படுத்தப்பட்டுள்ள புலப்படங்களை எளிதாக பார்வையிடும் பொருட்டு, **300 குறுவட்ட அளவர்களுக்கு முறையில் மடிக் கணினிகள் வழங்கப்படும்.**
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பட்டா மாற்றம் தொடர்பான தகவல்களை பரிமாற்றிக்கொள்ள ஏதுவாக, **குறுவட்ட அளவர்களுக்கு `சிம்கார்டு' வழங்கப்படும்.**
- நில உடமைதாரர்களுக்கு பயனளிக்கும் வகையில், "கூட்டுப் பட்டாக்கள்" உட்பிரிவு செய்யப்பட்டு "தனிப்பட்டாக்களாக" வழங்கிட தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.
- நிலஉரிமை விவரங்களை எளிதான முறையில் பொதுமக்கள் பார்வையிட மற்றும் நகல் பெற ஏதுவாக இணையதள இணைப்புடன் கூடிய ஒரு கணினியும், அச்சிடும் கருவியும் அனைத்து வட்டாட்சியர் / மாவட்ட ஆட்சியர் / மண்டல நிலஅளவை அலுவலகங்கள் மற்றும் நிலஅளவை, நிலவரித்திட்ட ஆணையரகம் ஆகிய இடங்களில் நிறுவப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, தேசிய நில ஆவணங்களை நவீன மயமாக்கும்

திட்டத்தை செயல்படுத்துவதில் முன்னோடியாகத் திகழும் என உறுதியளிக்கின்றேன்.

இந்த மண்டல ஆய்வுக் கூட்டத்தினை துவக்கி வைக்கும் அரிய வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் ஒரு முறை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்பித்து, உங்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்து எனது உரையை இத்துடன் முடிக்கின்றேன்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நடைபெறும் விவாதங்கள் நில அளவையை நவீனப்படுத்துவதில் தமிழ்நாடு அரசுக்கு மிகுந்த பயன் உள்ளதாக அமையும் என்ற எனது நம்பிக்கையை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9